




கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதி ஓசூர் ஊராட்சி ஒன்றியம் தொரப்பள்ளி அக்ரஹாரம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் குமுதேப்பள்ளி கிராமத்தில் கழிவுநீர் கால்வாய், அலசப்பள்ளி பட்வரப்பள்ளி ஊராட்சியில் தார்ச்சாலை, பாலிகானப்பள்ளி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிடம், பெலத்தூர் ஊராட்சியில் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டிடம், ஆகிய பணிகளை மாவட்டச் செயலாளர், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கஜேந்திரமூர்த்தி, லோகேஷ் ரெட்டி, முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் நாராயணசாமி, ஒன்றிய அவைத்தலைவர் நாகராஜ், துணை செயலாளர் பாபு, ரமேஷ், வீரபத்திரப்பா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் திம்மராயப்பா, கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் எஸ். ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், கூடுதல் ஆட்சியர் கோகுல், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பூங்கொடி ஆகியோர் உள்ளனர்.




அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்டக் கழக செயலாளர் அ.ரவி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### டி.பழனிவேல் - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. - என்.அசோக்குமார் எம்.எல்.ஏ. - ரெ.தங்கம் பங்கேற்பு!

# தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி - தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் பொங்கல் விழா! நல உதவிகள்!

### நிகழ்ச்சி ஏற்பாடு: சங்க மாவட்ட தலைவர் என், ஜெயபாலமுருகன், வீர,சரவணன்,ஆர். சின்னமணி!

*தஞ்சை, ஜன. 3 -*

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி - மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் இன்று (03.01.2026 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை குட்டால் கல்யாண மண்டத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாவட்டத் தலைவர் என். ஜெயபாலமுருகன், மாநில சங்க செய்திதொடர்பாளர் வீர. சரவணன், மாவட்ட சங்க செயலாளர் ஆர். சின்னமணி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் டி.பழனிவேல் தலைமையேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ., பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என். அசோக்குமார் எம்எல்ஏ, தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணியின் மாநில தலைவரும்,

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இவ்விழாற்கு நகரக் கழகச் செயலாளர் எஸ்ஆர் என்.செந்தில்குமார் முன்னிலை பொறுப்பு வகுக்கிறார்.

பட்டுக்கோட்டை நகர்மன்ற தலைவர் சண்முகப்பிரியா செந்தில்குமார், மற்றும் தஞ்சை தெற்கு மாவட்ட அனைத்து அனைத்து ஒன்றிய கழக செயலாளர்களான என்பி. பார்த்திபன், பா. ராமநாதன், குல.செ. அருள் நம்பி, ஆர்.பன்னீர்செல்வம், ஒன்றிய பொருளாளர் டி மெய்யநாதன், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் இணைப்பு பொதுச் செயலாளர் திருக்குவளை என் அம்பாள் குமார், மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் சொ. விஜயகுமார், மாணவரணி அமைப்பாளர் ஆசத். மகேந்திரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

சங்க மாவட்ட பொருளாளர் கேவி. கோட்டைதுரை, சங்க ஒன்றிய தலைவர் டி.கோபி செல்வம, எம். பாலசுப்பிரமணியன், எஸ்.ஆர் திருமேனி, செந்தில்குமார், ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார். இவ்விழாவில் கழகத் தொண்டர்களும், ஏராளமான மாற்றுத்திறனாளிகளும், சமூக ஆர்வலர்களும் பங்கேற்கின்றனர்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகளான புஷ்பலதா, வி.மாரிமுத்து, எஸ். சுரேஷ், வி. சபீர்கான், கே.வேலுச்சாமி ஆகியோர் விழா நிறைவில் நன்றியுரையாற்றுகின்றனர்.